DINAMALAR
National Tamil Daily

# தேடலும் ஆர்வமும் இருந்தால் பரதத்தில் வெற்றி நிச்சயம் பாலா தேவி சந்திரசேகர்



ஐந்து வயதில் பரதம் கற்க ஆரம்பித்த பாலா தேவி, இன்று உலகளவில் பரதக்கலையை பரப்பி வருகிறார். அவர், மயிலாப்பூரில் நிகழ்த்திய 'பத்மாவதி அவதாரம்' நாட்டிய நாடகம், ரசிகர்களை வெகுவாகக் கவர்ந்தது. அவர், நம் நாளிதழுக்கு அளித்த பேட்டி:

பரதக்கலை பயணம்?

எப்போதும் மாணவியாக இருந்து, கற்றுக் கொண்டே இருக்கிறேன். நிறைய படித்து, பல தேடல், ஆய்வுக்கு பின் தான், நடனத்தை நிகழ்த்துகிறேன்.

நாயன்மார், உத்தவகீதை, கர்ணன், பிரகதீஸ்வரர் உள்ளிட்ட விஷயங்களை, நாட்டிய வடிவில் வெளிப்படுத்தினேன். இதில், பிரகதீஸ்வரர் என்பது தமிழகத்தின் பொக்கிஷம். என்னால் முடிந்தளவு சில விஷயங்களை உலக மேடைக்கு எடுத்துச் சென்றுள்ளேன். இந்தத் தேடலும் ஆர்வமும்தான் என் பயணமாக இருந்துள்ளது.

உங்கள் குரு?

ஐந்து வயதில், கண்ணாடி முன் விளையாட்டாக ஆடிய என்னை, என் பெற்றோர் ஐதராபாதில், குரு ஜெயலட்சுமி நாராயணனிடம் அழைத்துச் சென்றனர். சென்னை வந்ததும், பத்மா சுப்பிரமணியத்திடம் கற்றேன். அவரே எனக்கு பெரிய 'இன்ஸ்பிரேசன்'.

பரதத்தில் உங்கள் முயற்சி?

நகலின்றி அசலாக இருக்க வேண்டும். தெரிந்ததை திருப்பித் திருப்பி ஆடுவதைவிட, பரதக்கலைக்கு நாம் என்ன செய்கிறோம் என்பதைப் பார்க்க வேண்டும். நம் படைப்புகள், நூறாண்டு கடந்தும் நிற்க வேண்டும். தஞ்சை பிரகதீஸ்வரர், பத்மாவதி, தேவரடியாள், பூரி ஜெகன்னாதரைப் பற்றி நாம் ஆடுகிறோம் என்றால், ரசிகர்களை அந்தந்த நூற்றாண்டுக்கே அழைத்துச் செல்ல வேண்டும். என் நடனத்தில், அப்படியான விஷயங்கள் இருக்கும்படி செய்துள்ளேன்.

இளைய தலைமுறையினர் பரதத்தை கற்பதில் உள்ள சிரமங்கள்?

'டென்னிஸ், பியோனா' வகுப்புடன் பரதத்தையும் கற்றுக்கொள்கிறேன் என இருக்கக்கூடாது. கலாசாரம், சாஸ்திரம், சிற்பக்கலை போன்றவற்றை பரதத்தில் எடுத்துரைக்கும் போது, அதைப்பற்றிய புரிதல் அவசியம். அனுபவித்து ஆட வேண்டும். தேடலும் ஆர்வமும் இருந்தால் வெற்றி நிச்சயம்.

பரதம் வாயிலாக சமூகத்திற்கு ஆற்றும் சேவை?

அதர்மத்தை கையில் பிடித்தால், கர்ணன், தர்மனாக இருந்தாலும், எந்த மாதிரி பாதிப்பு ஏற்படும் என்பதை, பரதக்கலை வாயிலாக எடுத்துரைக்கிறேன். சமூகத்திற்கு தேவையான கருத்துக்களை, பரதத்தில் எடுத்துரைக்கவே விரும்புகிறேன். தேவாரத்தில் நிறைய பொதுவிஷயங்கள் உள்ளன. இன்றைய காலக்கட்டத்தில், இந்த உலகிற்கு ஏதாவது பயன் உண்டாக வேண்டும். தமிழ் மண்ணையும், பரதத்தையும் பெருமைப்படுத்தும் வகையிலேயே என் பயணம் இருக்கும்.

பரதத்தில் அழகானவர்கள் தான் ஜொலிக்க முடியுமா?

என்னைப் பொறுத்தவரை, உள் அழகு ஒன்று உண்டு. சாத்வீகபாவம் தான் அபிநயமாகிறது. நாம் எப்படி இருந்தாலும், நாம் யாராக ஆடுகிறோமோ, அவராகவே மாறிவிட வேண்டும். அப்போது அங்கு நாம் நாமாக இருக்க மாட்டோம்.

திரவுபதி, பத்மாவதி, தேவரடியாள், கிருஷ்ணர், சிவன், பார்வதி என, யாராக நாம் ஆடினாலும், அவர்களாகவே மாறி விட வேண்டும். அப்போது, வெளி அழகு தெரியாது. நம்மை சிவன், கிருஷ்ணராகவே தான் ரசிகர்கள் பார்ப்பர்.

- நமது நிருபர் -